# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 51/2026

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW-2 |
| Name | :சுரேஷ்குமார் |
| Father/Husband's Name | : ராமசாமி |
| Village | : |
| Taluk | : |
| Calling | : உதவிஆய்வாளர் |
| Age | : 60 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07.04.2026.

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை:**

நான் தற்போது மறைமலைநகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றுகிறேன். கடந்த 21.09.2025 ம் தேதி காலை 7.30 மணியளவில் நானும் என்னுடன் சுதாமணி மற்றும் பாலசந்தர் காவலர்களுடன் காவனூர் ஏரிக்கரையில் ரோந்து பணியில் இருந்தபோது மதுபாட்டில்கள் விற்பதாக கிடைத்த ரகசிய தகவலின்பேரில் நானும் என்னுடன் காவலர்களும் கண்காணித்து கொண்டிருக்கும்போது ஆஜர் எதிரி ஜெயபாரதி க/பெ பரசுராமன் வெள்ளை நிற கோணிப்பை வைத்திருந்தார். அதை சோதனை செய்தபோது old chief 180 ml 7 பாட்டில்கள் மற்றும் Top star 180 ml 13 பாட்டில்கள் இருந்தது

அதை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து மேற்சொன்ன காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றினேன். அவர்களிடம் கையெழுத்து பெற்றேன். பின் எதிரியை கைது செய்து கைப்பற்றப்பட்ட பொருள் மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது குற்ற எண் 428/2025 பிரிவுகள் 4(1)(C) TNP(Amendmend) Act. **அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரியை இருநபர் பிணையில் நிலைய ஜாமீனில் விட்டேன். பிறகு கைப்பற்றபட்ட பொருளை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 95 அதசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** old chief 180 ml 7 பாட்டில்கள் மற்றும் Top star 180 ml 13 பாட்டில்கள் **சா.பொ 1 (எண்ணிக்கை-7) மற்றும் சா.பொ.2 (எண்ணிக்கை-13) ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னுடன் வந்த காவலர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு என் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் எதிரியிடம் இருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் மேலதிகாரியின் உத்தரவின் பெயரில் எதிரி மீது தவறான வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால்

சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் மற்றும் வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தவறாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.